கூற விரும்புகிறேன். ஆகவே, ஆசிரியர்கள் இது குறித்து எவ்வித சஞ்சலமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை. அவர்கள் கோரிக்கைகளை அரசு அனுதா பத்துடன் கவனிக்கும் என்பதால் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது அவசியம் இல்லை என்பதுடன் நியாயமாகாதென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஏற்கெனவே அளித்துள்ள வாக்குறுதிகளை ஏற்று ஏப்ரல் முதல் தேதி யிலிருந்து அவர்கள் மேற்கொள்ளவிருந்த கிளர்ச்சியை நிறுத்திவிட்டதாக, ஆசிரியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவித்துள்ளனர் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆசிரியர்களின் பொறுப்புணர்வை நான் பாராட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கத்திற்கு மட்டும் ஒரு கேள்வி கேட் கலாம். விவாதத்தை எழுப்பக்கூடாது. அது தான் விதிமுறை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த உத்தரவின் காரணமாகப் பாதிக்கப் பட்டவர்கள் 80 ஆசிரியர்கள். அவர்களில் 40 பேர்களுக்கு ஹைகோர்ட் 1968-ம் வருஷத்தில் ஆதரவாக முடிவு கொடுத்திருக்கிறார்கள். இன்று அர சாங்கத்தினுடைய உத்தரவு அவர்கள் சீனியர்களாக வருவார்கள் என்று சொல்வதோடு மாத்திரம் அல்லாமல், எந்தத் தேதி முதற்கொண்டு வருவார் கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி என்னிடம் குறிப்பு இல்லை. அந்தப் பிரச்னைகளையெல்லாம் இப்பொழுது தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையிலே இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டிருக்கிறார். விரைவிலே உத்தரவு வெளியிடப்படும். விரைவிலே ஆராயப்படவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) இராஜபாளையம் சண்முகர் ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் அவதியும், ஆலையைத் திறப்பதன் அவசியமும் குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ்

"இராஜபாளையம் சண்முகர் மில்ஸ் 18—7—1970 முதல் மூடப்பட்டு அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் வேலையிழந்து, அவர்கள் குடும்பங்கள் அவதிக் குள்ளாவதால் மேற்படி மில்லைத் திறக்க வேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Sree Shanmugar Mills, Rajapalayam is under closure with effect from 18th July 1970. Financial difficulties and labour troubles are stated to be the reasons for the closure. Even though the licensed capacity of the Mills is 13,200 spindles, the installed capacity is 10,156 spindles only.

The concerned officers discussed the case with the management and tried to persuade the management to revive the mill. But the management is not prepared to reopen the Mills on the ground that the loss sustained during the last 6 years since the

time they took the Mills on lease in 1964, is as high as Rs. 15 lakhs, and that they are not in a position to pay even their Employees' State Insurance/Employees' Provident Fund contributions and electricity consumption charges. As there was no prospect of the Mills being reopened by the present management and as the workmen numbering nearly 400 have been thrown out of employment, this Government requested the Government of India to investigate into the affairs of the mill under the Industries (Development and Regulations) Act. The Government of India have constituted a committee under the Industries (Development and Regulations) Act in January 1971 and the report of the Committee is awaited.

திரு. க. சுப்பு : தலேவர் அவர்களே, இறுதியான முடிவு வரும் வரை வேலே இழந்த தொழிலாளர்களுக்கு பிராவிடன்டு பண்டு நிதியிலிருந்து ரூ. 500 ஏற்கனவே முதல் தவணேயாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணேயாகத் தொகை கொடுப்பதற்கு அவர்களுடைய பண்டில் நிதி இல்லாத காரணத்தால் எம்ப்ளாயர்ஸ் பண்டிலிருந்து ரூ. 500 போட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லி அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தின் பேரில் துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மத்திய அரசாங்கத்தினுடைய அலுவலில் வருகிறது. இதுபற்றி ஈ.பி.எஃப்., கமிஷனரைக் கேட்க வேண்டியது. இந்த அரசுக்கு அதுபற்றித் தெரிவிக்கப்பட்டால், நாம் அதுபற்றிக் கேட்கலாம்.

(இ) கோவை முருகன் ஆலே மூடப்பட்டதும், தொழிலாளர் துயர நிலேயும் குறித்து.

திரு. சு. துரைசாமி : தலேவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னுல் மீண்டும் மூடப்பட்டு விட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலேயில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலேவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னுல் மீண்டும் மூடப்பட்டுவிட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலேயில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.